**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**மேட்டூர் நகராட்சி**

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 06.01.2020 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

**மன்றப் பொருள்**

**1 )** மேட்டூர் நகராட்சி பகுதியில் அரசாணை எண் 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.01.2014ன் படி பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ரூ.7308 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பாதாள சாக்கடை பணிக்காக சாலைகள் வெட்டப்பட்டு குழாய்கள் பதிக்கப்பட்டதால் சாலைகள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. ஏற்கனவே நகராட்சி சாலைகள் குடிநீர் திட்ட குழாய்கள் பதிப்பதற்காக வெட்டப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டங்களில் முடிவுற்ற பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதுப்பிக்க ரூ.1999.92/– இலட்சத்திற்கும் இயற்கை இடர்பாடுகளில் சேதமடைந்த சாலைகளுக்கு ரூ.54.04 இலட்சம் மொத்தம் ரூ.2054.32 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மேட்டூர் நகராட்சியில் 14வது மத்திய நிதிக்குழு மானிய நிதி (14th CFC Grant) திட்டத்தின் கீழ் 2019–2020ஆம் ஆண்டிற்கு இரண்டு தவணைகளாக ரூ.343.11 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்காணும் 14 வது மத்திய மாநில நிதிக்குழு மானிய நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 2019–2020 ஆம் ஆண்டிற்கான இரண்டு தவனைகளில் 50% தொகையான ரூ.171.55 இலட்சத்திற்கு கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பணியின் விபரம் பின்வருமாறு**

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மேற்கு பிரதான சாலை பேருந்து நிலையம் முதல் பொதுப்பணித்துறை அலுவலகம் வரை தார் தளம் மேம்படுத்துதல் | 47.00 |
| 2 | ஆதிபராசக்தி கோவில் சாலை, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் முதல் அரசினர் கலை கல்லூரி வரை தார் தளம் மேம்படுத்துதல் | 47.85 |
| 3 | சதுரங்காடி காந்தி சிலை முதல் ஆஞ்சநேயர் கோவில் வரை தார் தளம் மேம்படுத்துதல் | 24.80 |
| 4 | வார்டு எண் 26 அண்ணா நகர் தார் தளம் மேம்படுத்துதல் | 9.90 |
| 5 | ICH சாலை, ஆண்டிக்கவுண்டனூர் நகர் முதல் மாதையன்குட்டை செல்லும் சாலை தார் தளம் | 48.00 |

| | | |
|---|---|---|
| | மேம்படுத்துதல் | |
| | **மொத்தம்** | **177.55.** |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
3. அதிகமாகும் செலவினத்திற்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.110/2020/ இ1)**

**தீர்மான எண். 1 நாள். 06.01.2020**

அனுமதிக்கப்பட்டது

**2)** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24ல் உள்ள அம்மா உணவகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் Sted Grinder, மின் சாதன பொருட்கள் மற்றும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் வருடாந்திர பராமரிப்பு பணிகளை AML முறையில் மேற்க்கொள்ள உத்தேச செலவினத்தொகை ரூ.4.00 இலட்சம் ஆகும் மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.500/2020/ இ1)**

**தீர்மான எண். 2 நாள். 06.01.2020**

அனுமதிக்கப்பட்டது

**3)** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய சுமார் 158K.M நீளம் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு 8500 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. குடிநீர் பகிர்மானம் மற்றும் நீர் உந்து குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் குடிநீர் விநியோக குழாய்களில் பொருத்தப்பட்டுள்ள வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யவும் தேவையான தகுதி வாய்ந்த பணியாளர்கள் தற்சமயம் நகராட்சி வசம் இல்லாத நிலையில் பொதுமக்களுக்கு சீராக குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது.

எனவே, இந்நகராட்சிக்குட்பட்ட பகிர்மான குழாய் மற்றும் வால்வுகளை 2019-20 ஆம் ஆண்டிற்கு இயக்கவும் மற்றும் பராமரிக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.93/2020/ இ1)**

**தீர்மான எண். 3 நாள். 06.01.2020**

அனுமதிக்கப்பட்டது

**4)** மேட்டூர் நகராட்சியில் நடைபெறும் திட்ட பணிகள் குறித்து தினசரி நாளிதழில் வெளியிட்டமைக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி அவர்கள் 29.09.2019 அன்று முடிவுற்ற பணிகள் திறந்து வைத்தும் புதிய பணிக்குழு அடிக்கல் நாட்டியும் நகர்வாழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும் வருகை தந்தமைக்கு ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் வரவேற்றமைக்கும் மற்றும் வளச்சி பணிகளை தொழில் மலர்களில் வெளியிட்டமைக்கு ஆகும் கீழ்கண்ட செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண். | நாளிதழின் பெயர் | வெளியிட்டமைக்கு வழங்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. | Kal Publication (P) Ltd ( சுதந்திர தின சிறப்பு தொழில் மலர்) | ரூ.9870/- |
| 2. | மாலை தமிழகம் | ரூ.18900/- |
| 3. | மாலை மலர் | ரூ.9576/- |
| 4. | மாலை முரசு (தொழில் மலர் 2018) | ரூ.8400/- |
| 5. | தினமலர் | ரூ.10,206/- |
| 6. | தினதந்தி | ரூ.17,824/- |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி மேற்கண்ட நாளிதழுக்கு தொகை வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.3802/2010/ இ1)**

**தீர்மான எண். 4 நாள். 06.01.2020**

அனுமதிக்கப்பட்டது

**5)** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் அல்லாத பயன்பாட்டில் உள்ள மொத்தம் 112 எண்ணிக்கையில் உள்ள மினி பவர்பம்புகள் மூலம் பொது மக்களுக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

ஆழ்துளை கிணற்று மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய தேவையான ஆட்களும் மற்றும் உதிரிப் பொருட்கள் இந்நகராட்சியில் இல்லாததாலும் பொது மக்களுக்கு சீரான தண்ணிர் விநியோகம் செய்ய 2020-2021ஆம் ஆண்டிற்கு இயக்கவும் மற்றும் பராமரிப்பு பணி மேற்க்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.94/2020/ இ1)**

**தீர்மான எண். 5 நாள். 06.01.2020**

அனுமதிக்கப்பட்டது

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி.**

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**மேட்டூர் நகராட்சி**

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 31.01.2020 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

**மன்றப் பொருள்**

**1)** இந்நகராட்சி பகுதியில் உள்ள வீரப்பாண்டிய கட்டபொம்மன் நகர், மேட்டூர் அணையில் வசிக்கும் திருமதி.சின்னபாப்பா, திரு.செந்தில் ஆகிய இருவரும் சொத்து பிரச்சனை காரணமாகவும், வீட்டு வரி பட்டா பெற்றது குறித்தும் மேட்டூர் சார்வு நீதி மன்றத்தில் OS No 359/2019 –மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை 8வது பிரதிவாதியாக சேர்ந்து வழக்கு தொடர்ந்துள்ளார்.

எனவே இவ்வழக்கினைநகராட்சி வழக்கறிஞர் திரு. TMA. இனியன், B.A., LLB அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் முழுவதிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4645/2019/எப்1)**

**தீர்மான எண். 6 நாள். 31.01.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**2)** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு A பிளாக் எண்.63, நகர புல எண் 63, நகர புல எண்.18/73 அமைந்துள்ள பாப்பம்மாள் திருமண மண்டபம் கட்டப்பட்டு 55 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. மேற்படி மண்டபம் தற்போது வரை நகராட்சி மூலம் வாடகை அடிப்படையில் திருமண மற்றும் இதர விசேசங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வரம்பட்டது.

**தற்போது மேற்படி மண்டபம் வாடகை மதிப்பிட்டின் அடைப்படையில் ஆண்டு குத்தகைக்கு பொது ஏலம் விட திட்டமிடப்பட்டுள்ளதால் மராமத்து பணிகள்**

**மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**4.80 **இலட்சம் ஆகும் மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலக குறிப்பு

3. **மன்றம் அனுமதிக்கலாம்**

4. **இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**

**(ந.க.எண்.4649/2019/இ1)**

**தீர்மான எண். 7 நாள். 31.01.2020**

அனுமதிக்கப்பட்டது

**3) பொதுசுகாதார பணிகளுக்கு தேவையான தளவாட சாமான்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய** 20.12.2019– **ந் தேதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி, அறிவிப்பு செய்யப்பட்ட வகையில்** 10.01.2020– **ந் தேதி இரண்டு அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.**

| வ எண் | ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒவ்வாரு தளவாட சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.பை | | | | | | | | | | சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சவுல் பெரியது பிடியுடன் | 9 பல் சிறிய கொக்கி | 5 பல் கொக்கி பிடியுடன் | அரிவாள் | கையுறைகள் | மழைக்கோட்டுகள் | முகவுறை | வாள் மண்வெட்டிகள் பிடியுடன் | ஒளிரும் ஜாக்கெட் | ஓட்டுநர்களுக்கான ஷீக்கள் | |
| 1 | M/s.செயலாளர் S. 527, கெலமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், கெலமங்கலம். | 670/- | 780/- | 610/- | 910/- | 80/- | 1450/- | 72/- | 600/- | 310/- | 1400/- | அதிகம் |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | M/s.செயலாளர் D.D.165,பென்னாகரம் வட்டம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், பென்னாகரம். | 650/- | 770/- | 600/- | 900/- | 75/- | 1400/- | 68/- | 575/- | 300/- | 1350/- | குறைவு |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார பணிகள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களை கொள்முதல் செய்ய வரப்பெற்ற அரசு சார்ந்த கூட்டுறவு சங்கத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையினை வழங்கியுள்ள வரிசை எண் 2 –ல் காணும் M/s.செயலாளர் D.D.165,பென்னாகரம் வட்டம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், பென்னாகரம் என்ற கூட்டுறவு சங்கம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கியுள்ளது எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியை வழங்கிய நிறுவனத்திற்கு சப்ளை உத்தரவு வழங்க மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2205/2019/எச்1)

தீர்மான எண். 8 நாள். 31.01.2020

அனுமதிக்கப்பட்டது

4) மேட்டூர் நகராட்சி பொதுசுகாதாரப்பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஆட்டோ வாகனம் எண். TN52W7242-ல் ரேடியோட்டர், செல்ப் மோட்டார், டைனமோ, டீசல் ஓஸ், டீசல் இன்ஜக்டர் பம்பு, இன்ஜக்டர் சென்சார் போன்றவைகள் பழுதாகி வண்டியினை பொது சுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே இவ்வாகனத்தை பொது சுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தவும் பொதுசுகாதாரம் சார்ந்த பணியாக உள்ளதால் பொதுசுகாதாரம், அவசரஅவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து உத்தேச மதிப்பீடு கோரப்பட்ட வகையில் ரூ 32500./– ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ 32500./– ஆகும். எனவே, இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொது சுகாதாரப் பிரிவில் உள்ள ஆட்டோ வாகனம் எண். TN52W7242ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யவும், அதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச செலவின தொகையான ரூ.32500/–க்குள் செலவினம் மேற்கொள்ளவும், இப்பணிக்காக தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதியின் பேரில் விலைப்புள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.212/2020/எச்1)

தீர்மான எண். 9 நாள். 31.01.2020

அனுமதிக்கப்பட்டது

5) மேட்டூர் நகராட்சி பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்பட்ட வரும் கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் வண்டி எண்.TN27W0535-க்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிசான்று பெறவும், அதற்காக வாகனத்தில் உள்ள பழுதான பொருட்களுக்கு புதிய பொருட்கள் பொருத்தவும், பழுதுபணிகள் மேற்கொள்ளவும், இதர வேலைகள், பெயிண்டிங் மற்றும் வாசகங்கள் எழுதுதல் போன்ற அனைத்தப் பணிகளும் மேற்கொள்ள 25.12.2019ந் தேதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. இவ்வாறு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 13.01.2020ந் தேதி கீழ்க்கண்ட இரண்டு நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு

| வரிசை எண் | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ.பை | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s.ஜோதிமுருகன்மோட்டார்ஒர்க்ஸ், சங்கர் நகர்,சேலம். | 1,48,950/– | அதிகம் |
| 2 | M/s. லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், ஒர்க்ஷாப் கார்னர், மேட்டூர். | 1,39,950/– | குறைவு |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பொதுசுகாதார பிரிவில் பொதுசுகாதார பணிக்கு உபயோகிக்கப்படும் கழிவு நீர் உறிஞ்சும் வாகனம் TN27W0535 க்கு 2020ம் ஆண்டிற்கான வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று பெற ஒப்பந்த புள்ளிகள்

கோரப்பட்டதில் வரிசை எண்.2 ல் காணும் M/s லட்சுமி ஆட்டோ, டீசல், ஒர்க்ஸ்ஷாப் கார்னர், சேலம் மெயின்ரோடு, மேட்டூர் என்ற நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது. எனவே, குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவது குறித்து மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4803/2019/எச்1)

தீர்மான எண். 10 நாள். 31.01.2020

அனுமதிக்கப்பட்டது

6) பொது சுகாதாரப்பணிகளுக்கும், டெங்கு நோய் தடுப்பு பணிகளுக்கு தேவையான பிளிச்சிங் பவுடரை கொள்முதல் செய்ய 27.12.2019–ந் தேதி ஒப்பந்த புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 14.01.2020–ந் தேதி கீழ்காணும் இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண் | ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை டன்.1க்கு ரூ.பை. | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s.செயலாளர்<br>S-527, கெலமங்கலம்<br>வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், கெலமங்கலம். | ரூ.43,000/– | அதிகம். |
| 2 | M/s.செயலாளர்<br>D.D.165, பென்னாகரம் வட்டம்,<br>வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், பென்னாகரம் | ரூ.41,500/– | குறைவு. |

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பொது சுகாதார பணிகளுக்கும், டெங்கு நோய் தடுப்பு பணிகளுக்கும் தேவையான பிளிச்சிங் பவுடரை கொள்முதல் செய்ய வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் காணும் M/s.செயலாளர், பென்னாகரம் வட்டம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், பென்னாகரம் என்ற அரசு சார்ந்த நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி

தொகையான டன் 1–க்கு ரூ. 41,500/–ஐ வழங்கியுள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப் புள்ளி தொகையினை வழங்கிய நிறுவனத்தின் ஒப்பந்த புள்ளியினை, ஏற்பதும் உறுதி செய்வதும் மன்றம் பரிசீலீத்து அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2711/2019/எச்1)

தீர்மான எண். 11 நாள். 31.01.2020

அனுமதிக்கப்பட்டது

7) பொது சுகாதாரப்பணிகளுக்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு பவுடரை கொள்முதல் செய்ய 27.12.2019–ந் தேதி ஒப்பந்த புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 14.01.2020–ந் தேதி கீழ்காணும் இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண் | ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை டன்.1க்கு ரூ.பை. | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s.செயலாளர்<br>D.D.165, பென்னாகரம் வட்டம்,<br>வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், பென்னாகரம் | ரூ.10,500 | குறைவு. |
| 2 | M/s.செயலாளர்<br>S-527, கெலமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், கெலமங்கலம். | ரூ.8,500 | அதிகம். |

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பொது சுகாதார பணிகளுக்கு தேவையான சுண்ணாம்பு பவுடரை கொள்முதல் செய்ய வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் காணும் M/s.செயலாளர், பென்னாகரம் வட்டம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், பென்னாகரம் என்ற அரசு சார்ந்த நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையான டன் 1க்கு ரூ.8,500/-ஐ வழங்கியுள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையினை வழங்கிய நிறுவனத்தின் ஒப்பந்த புள்ளியினை, ஏற்பதும் உறுதி செய்வதும் மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2205/2019/எச்1)**

**தீர்மான எண். 12 நாள். 31.01.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**8)** இந்நகராட்சி பகுதியில் உள்ள பிட்டர்மேன் குடியிருப்பு அருகில் வசிக்கும் திரு.கி.செல்வகுமார் த/பெ கிருஷ்ணன் என்பவர் IA No.3/2009ன் படி OS.No.49/2015ன் 28.08.2019ஆம் தேதிய தீர்ப்புரையின் பேரில் மேல்முறையீடு செய்து தற்போது மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் As.No.30/2019 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேல்முறையீட்டு வழக்கில் ஆணையாளர் மேட்டூர் நகராட்சி அவர்களை மூன்றாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA. இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.105/2020/ எப்1)**

**தீர்மான எண். 13 நாள். 31.01.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**9)** இந்நகராட்சி பகுதியில் உள்ள சதுரங்காடி மேற்கு மெயின் ரோட்டில் வார்டு A , பிளாக் 46 நகரளவு எண்115 உள்ள ஆக்கிரமிப்பு கடைகளை அகற்ற கூடாது என 1.திரு. வெங்கடேஸ்வரன்2.திரு.ஈஸ்வரன் 3.திரு தங்கவேல் 4திருமதி.ராணி ஆகிய நால்வரும் மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் OS No140/2019 –மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA. இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4042/2019/ எப்1)**

**தீர்மான எண். 14 நாள். 31.01.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**10)** இந்நகராட்சி பகுதியில் உள்ள கதவு எண்.56/160A, காந்தி நகர், சேலம் கேம்ப் மேட்டூர் அணை.56ல் வசிக்கும் திரு.கண்ணன், த/பெ ராஜீ என்பவர் சொத்து பிரச்சனை காரணமாக மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.130/2018 மூலம் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கில் ஆணையாளர் மேட்டூர் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு.டி.எம்.ஏ.இனியன் நகராட்சி வழக்கறிஞர் அவர்களை கோரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு ஆகும் முழு செலவினத்திற்கும் மன்றத்தின் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.5861/2018/எப்1)**

**தீர்மான எண். 15 நாள். 31.01.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**11)** இந்நகராட்சி பகுதியில் உள்ள மேற்கு மெயின் ரோட்டில் வார்டு A, பிளாக் 28, நகரளவு எண்.3/2, 3/3ல் கட்டப்பட்டுள்ள மூன்று மாடி கட்டிடத்தின் அருகில் உள்ள மழைநீர் வடிகால் செல்லும் பாதையை அகற்றினால் கட்டிடம் பாதிப்பது சம்மந்தமாக திரு.கே.ஆர்.மணி இருவர் மேட்டூர் சார்பு நீதி மன்றத்தில் OS No.237/17 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக சேர்ந்து வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA.இனியன், B.A, LLB., அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3370/2017/எப்1)**

**தீர்மான எண். 16 நாள். 31.01.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**12)** இந்நகராட்சி பகுதியில் உள்ள ஆண்டிகவுண்டர் நகர் பகுதியில் உள்ள செண்பக மாரியம்மமன் கோவில் எதிரில் மேற்கு மெயின் ரோட்டில் திரு.எம்.முரளி, என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற கோரி திரு.கே.ரமேஷ் மற்றும் ஏழு நபர்கள் மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் OS

122/2019 – மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை 2ம் பிரதிவாதியாக சேர்ந்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் 20.12.2019 அன்று ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA. இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4182/2019/எப்1)**

**தீர்மான எண். 17 நாள். 31.01.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**13)** இந்நகராட்சி பகுதியில் தங்கமாபுரிபட்டிணம் கதவு எண்.36/21Bல் வசிக்கும் திருமதி.சிவகாமி க/பெ நாகராஜன் என்பவர் நகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்பை பெற்று கொண்டு (1055/2018/எப்) தாவா சொத்தை பிரதிவாதிகளோ அவர் தம் ஆட்களோ எவ்வகையிலும் இடிக்கவோ சேதபடுத்த கூடாது என நிரந்தர தடை உறுத்து கட்டளை கோரி சேலம் விடுமுறை கால மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அதில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை எதிர்மனுதாரராக சேர்ந்து அசல் வழக்கு எண்.43/18 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் புதியதாக அசல் வழக்கு எண்.61/18 வழங்கியுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA. இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2856/2017/எப்1)**

**தீர்மான எண். 18 நாள். 31.01.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**14)** இந்நகராட்சி பகுதியில் உள்ள கதவு எண்.10/2A ஓர்க்ஷாப் கார்னர் பகுதி மேட்டூர் அணையில் வசிக்கும் திரு.எஸ்.அசோகன் த/பெ செங்கோட கவுண்டர் மேற்கு மெயின் ரோட்டில் உள்ள தற்காலிக ஆக்கிரமிப்பு கடை வரி விதிப்பு எண்.101 ஐ அகற்ற கூடாது என மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் O.S.88/2019

மூலம் இடைகால தடை உத்தரவு கோரி வழக்கு தொடர்ந்துள்ளார். அவ்வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு உள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு.டி.எம்.ஏ.இனியன் நகராட்சி வழக்கறிஞர் அவர்களை கோரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு ஆகும் முழு செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.701/2019/ எப்1)**

**தீர்மான எண். 19 நாள். 31.01.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**15)** இந்நகராட்சி பகுதியில் உள்ள கதவு எண்.20/3C மசூதி தெரு மேட்டூர் அணை–1ல் வசிக்கும் திருமதி.சகுந்தலா க/பெ ராமநாதன் என்பவர் ஆக்கிரமிப்பினை அகற்ற கூடாது என மேட்டூர் சார்பு நீதி மன்றத்தில் அசல் வழக்கு எண்.83/2019 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். அவ்வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு.T.M.A.இனியன் நகராட்சி வழக்கறிஞர் அவர்களை கோரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு ஆகும் முழு செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.618/2019/ எப்1)**

**தீர்மான எண். 20 நாள். 31.01.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**16)** இந்நகராட்சியில் திரு.S.ராமசாமி உதவியாளராக பணியாற்றி **31.05.1996**ல் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டு இருக்க வேண்டும். படிகாரம் வாங்கியது குறித்து குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு முடிவடையாமல் உள்ளதால் **31.05.1996** பிற்பகல் முதல் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதப்படி **31.05.1996**ல் ஓய்வு பெற

அனுமதிக்காமல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டது. இவ்வலுவலக செயல்முறைகளின் படி பிழைப்பூதியம் வழங்கப்பட்டு வந்த நிலையில் அரசு செயலர் அரசாணை எண்.2D No.86 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப.4) நாள்.04.06.08 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.24459/2007 OP3 நாள்.19.06.2008ல் 31.05.1996 பிற்பகல் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை சென்னை அவர்களின் கடிதம் நி.மு.எண்.53472/ந.ஒ.ச(2)/2008 நாள்.12.02.2009ல் ஓய்வூதிய பயன்கள் அனுமதிக்கப்பட்டு ஓய்வூதியம் பெற்று வந்த நிலையில் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.26491/2019 தேதிய தீர்ப்பில் ரூ.10,17,251/—க்கு 12% வட்டி கணக்கிட்டு 8 வார காலத்திற்குள் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொகைக்கு 12% வட்டி கணக்கிட்டு வழங்குவது குறித்து திரு.லூர்து பால் மௌரியா, சென்னை அரசு வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை கோரப்பட்டது. மேற்படி வழக்கிற்கு ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4086/2019/ எப்1)**

**தீர்மான எண். 21 நாள். 31.01.2020**

அனுமதிக்கப்பட்டது

**17) மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள சமுதாய கழிப்பிடங்களுக்கு தண்ணீர் வசதி மற்றும் மின் வசதிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பிட்டு தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும் மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.316/2020/இ1)**

**தீர்மான எண். 22 நாள். 31.01.2020**

அனுமதிக்கப்பட்டது

18) மேட்டூர் நகராட்சி அலுவலகம், நகராட்சி துவக்கப்பள்ளிகள், பேருந்து நிலையம் மற்றும் அம்மா உணவகங்கள் கீழ்க்கண்ட விபரப்படி குடிநீர் சுத்திகரிப்பு ( RO ) Plant பயன்பாட்டில் இருந்து வருகிறது.

| வ எண் | RO Plant உள்ள இடம் | திறன் |
|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலகம் | 250LPH |
| 2 | நகராட்சி துவக்கப்பள்ளியில் | 4X50LPH |
| 3 | அம்மா உணவகம் | 50LPH |
| 4 | பேருந்து நிலையம் (தாய்மார்கள் பாலூட்டும் அளவு) | 20LPH |

மேற்கண்ட RO Plant ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும் வருடத்திற்கு ஒருமுறை Filter (வடிப்பான்) மாற்றவும் உத்தேச செலவின தொகை ரூ.1.60 ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

(ந.க.எண்.316/2020/இ1)

தீர்மான எண். 23 நாள். 31.01.2020

அனுமதிக்கப்பட்டது

19) மேட்டூர் நகராட்சி பொதுசுகாதார பணி உபயோகத்தில் உள்ள ஆட்டோ வாகனம் எண்.TN52W7242-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து 10.01.2020ந் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து 23.01.2020 விவரப்புள்ளிகள் வரப் பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| வரிசை எண் | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ.பை | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s.ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சங்கர் நகர், சேலம் | 31,680.00 | அதிகம் |
| 2 | M/s.JVK ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் 279/28-J. J.V.K காம்ப்ளக்ஸ், சேலம் | 29,850.00 | அதிகம் |
| 3 | M/s.லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், ஒர்க்ஷாப் கார்னர், மேட்டூர் | 27,850.00 | குறைவு |

அலுவலக குறிப்பு

1) **மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.**
2) **பொது சுகாதாரப்பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுவரும் ஆட்டோ வாகனம் எண்.TN52W7242 ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரிசை எண்.3ல் காணும் M/s லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனம் குறித்த விலைப்புள்ளி தொகையான ரூ.27,850/-ஐ வழங்கியுள்ளது. எனவே குறித்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.212/2020/எச்1)**

**தீர்மான எண். 24 நாள். 31.01.2020**

அனுமதிக்கப்பட்டது

20) மேட்டூர் நகராட்சியில் மரச்செடி கொடிகளை சிறுசிறு துண்டுகளாக்கும் இயந்திரம் (Shredder Machine) சப்ளை செய்தல் பணிக்கு ரூ.1.70 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 28.01.2020ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| **1** | M/s Sri Kaliyamman Trading Corporation<br>101,Kamaraj Nagar<br>Namakkal | **0.17%** சதவிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| **2** | M/s Sri Anthanur Amman<br>Brothers<br>Namakkal | **0.78 %** சதவிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு ஒப்புதலுக்கு

2. **வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட** 0.17% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள** M/s Sri Kaliyamman Trading Corporation அவர்களின் **ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்**

**(ந.க.எண்.339/2020/ இ1)**

**தீர்மான எண். 25 நாள். 31.01.2020**

அனுமதிக்கப்பட்டது

**21) மேட்டூர் நகராட்சியில் பழைய முதலாவது குடிநீர் திட்டத்தின் கீழ் சுத்திகரிப்பு நிலையம், நீருந்து நிலையம், நீர்த்தேக்க தொட்டிகள், பகிர்மான குழாய்கள் தனியார் மூலம் இயக்கவும் மற்றும் பராமரிப்பு பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர், சென்னை-5 அவர்களின் கடித ந.க.எண்.23651/2013/DO1 நாள்.21.11.2019ன் படி அனுமதி வழங்கப்பட்டது. மேற்க்கண்ட பணியினை ரூ.35.46 இலட்சத்திற்கு மேற்கொள்ள 24.01.2020ல் ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கு வைக்கப்படுகிறது.**

| வ எண் | ஒப்பந்ததாரரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | **திரு.ஆர்.ஆனந்த் ஒப்பந்ததாரர், ஓமலூர்** |
| 2 | **திரு.கே.கோவிந்தன், பூசாரிப்பட்டி, ஓமலூர்** |
| 3 | **திருவாளர்.கிருத்திகா கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், மேட்டூர்** |

**வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற வ.எண்.1,2 ஒப்பந்த புள்ளிகள், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். வ.எண்.3ல் ஒப்பந்த புள்ளி தகுதியான தொழில் நுட்ப விதிகளின் படி நிலையான திட்ட அளவு தாக்கல்**

செய்யப்படாததால் விலைவிகிதம் திறப்பதற்க்கு தகுதி பெறவில்லை. எனவே தகுதி வாய்ந்த கீழ்க்கண்ட இரு ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் 28.01.2020ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.ஆனந்த், ஒப்பந்ததாரர், ஓமலூர் | 0.13% அதிகம் |
| 2 | திரு.கே.கோவிந்தன், பூசாரிப்பட்டி, ஓமலூர் | 0.04% |

எனவே கே.கோவிந்தன், பூசாரிப்பட்டி, ஓமலூர் ஒப்பந்ததாரர், என்பவர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் மூன்றாண்டு தொகுப்பு காலத்தில் இப்பணியை மேற்க்கொள்ள வேண்டி முதலாம் ஆண்டு செலவினங்களுக்கு ரூ.35,43,120/-க்கு குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.914/2019/இ1)

தீர்மான எண். 26 நாள். 31.01.2020

அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி.